DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THOOTHUKUDI.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>(Chapter.. | ... | DEPOSITION OF WITNESS |
| Preliminary Register | ... | Case No. S.C.No.260/2024 |
| Sessions | ... | |
| Deposition of witness for | | Prosecution - P.W.15<br>Defence<br>Court |

| | |
|---|---|
| Name | டாக்டர்.சுமதி |
| Father's Name | த/பெ.ஆறுமுககிருஷ்ணகுமார் |
| Village | தூத்துக்குடி |
| Taluk | |
| Age | 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2026.

**(1வது எதிரி ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர் இல்லை. 2வது வது எதிரியின் வருகையின்மைக்கு கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 3 முதல் 6 எதிரிகள் ஆஜர்.)**

**முதல் விசாரணை :–**

நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.04.2024ம் தேதி இரவு 09.50 மணிக்கு நான் பணியில்இருந்தபோது தூத்துக்குடி நேசமணிநகர் 1வது தெருவை சேர்ந்த செந்தில்வேல் மகன் பிரேம்குமார் வயது 19 என்பவர் சிகிச்சைக்கு வந்தார். நான் அவரிடம் என்ன நடந்தது என்று விசாரித்தபோது 19.04.2024ம் தேதி இரவு 09.40 மணியளவில் நேசமணிநகரில் வைத்து அடையாளம்தெரியாத 5 நபர்கள் அருவாள் கொண்டு தாக்கியதாக சொன்னார். நான் அவரை

பரிசோதனை செய்தபோது இடது காலில் 4 x 1 x 1 செமீ அளவில் சிதைவு காயமும், இடது கையின் முன்புறம் 5 x 2 x 1 செமீ அளவில் சிதைவு காயமும், இடது கையில் பின்புறம் 8 x 2 x 1 செமீ மற்றும் 4 x 2 x 1 செமீ அளவில் சிதைவு காயமும், இடது தலைப்பகுதியில் 3 x 1 x 0.5 செமீ சிதைவு காயமும் இருந்தது. அவருக்கு இடது கையில் எலும்பு முறிவு இருந்ததால் நுண்கதிர் நிபுணர் கருத்துரையின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளித்தேன். காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.20.**

பின்பு அதே தேதியில் இரவு 09.55 மணிக்கு தூத்துக்குடி ஸ்பிக்நகர் அத்திமரப்பட்டி விலக்கு ராமஜெயம் மகன் வேல்ராஜ் வயது 45 என்பவர் சிகிச்சைக்காக என்னிடம் ஆஜரானார். அவரை விசாரித்தபோது 19.04.202 ம் தேதி இரவு 09.30 மணியளவில் முள்ளக்காடு அருகில் உள்ள காந்திமதி டீக்கடையில் வைத்து அடையாளம் தெரியாத 3 நபர்கள் அருவாள் கொண்டு தாக்கியதாக என்னிடம் கூறினார். அவரைபரிசோதனை செய்தபோது அவருக்கு தலையின் நடுப்பகுதியில் 12 x 3 x 3 செமீ அளவில் சிதைவு காயம் இருந்தது. அவருக்கும் தலை எலும்பில் எலும்பு முறிவு இருந்தது. நுண்கதிர் நிபுணரின் கருத்துரையின்படி அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்றளித்தேன். காயச்சான்றிதழுடன் கூடிய விபத்து பதிவேடு **அ.சா.ஆ.21.** மேற்படி 2 நபர்களும் சிகிச்சை முடிந்து மருத்துவமனையிலிருந்து 01.05.2024 ம் அன்று விடுவிக்கப்பட்டனர். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**

மேற்படி காயங்கள் ஒரு நபர் நிலைதடுமாறி கீழே விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறு விசாரணை – இல்லை.**

**ஒம்/-R.V.ராஜகுமார்,**
**தலைமை நீதித்துறை நடுவர்,**
**தூத்துக்குடி.**